அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

## தமிழ் - ஆண்டு 5

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

பாரதியார் ஒரு கவிஞர், எழுத்தாளர், செய்தித்தாள் ஆசிரியர், குமுகச் சீர்திருத்தவாளர் எனப் பன்முகப் புலமை கொண்டவர். தன் இளம் அகவையிலேயே பல இழப்புகளையும் வறுமையையும் எதிர்கொண்டவர். எனினும், இவர் மன உறுதியுடன் குமுகச் சீர்திருத்தத்திற்காகப் போராடினார். பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்திய மக்கள் மூடச்சிந்தனைகளுள் ஆட்பட்டிருந்தனர். இவர்கள் மூடக்கொள்கைகள், பெண் அடிமைத்தனம் எனப் பல்வேறு முரண்பாடுகளைத் தமக்குள் கொண்டிருந்தனர். இந்நிலையைக் கண்டு நெஞ்சு பொறுக்குதில்லையே எனப் பாரதியார் வருந்திப் பாடினார்.